# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 249/மா/2017

ஆணை எண். 278/2017

நாள் : 15/12/2017

திருமதி S. கலா,
ஆதம்பாக்கம்,
சென்னை – 88. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்கள்,
ஆவடி நகராட்சி,
அம்பத்தூர் மண்டலம்,
மதுராந்தகம் நகராட்சி,
ஆரணி நகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை, ஆதம்பாக்கம், எண்.100, பாலகங்காதரர் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி S. கலா அவர்களின் 13.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.12.2017 அன்று பெறப்பட்டு 249/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, ஆதம்பாக்கம், எண்.100, பாலகங்காதரர் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி S. கலா என்பவர் தான் நகராட்சிப் பணியில் மேலாளராகப் பணியாற்றி, 28.02.2014 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்று ஓய்வூதிய ஆணை எண்.25279/17 மூலம் ஓய்வூதியம் பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். தான் பணியாற்றிய கீழ்க்காணும் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து உரிய ஆணை வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

| வ. எண். | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | பணியாற்றிய காலம் | உள்ளாட்சி அமைப்பிற்கு மனு செய்த நாள் |
|---|---|---|---|
| 1. | ஆவடி நகராட்சி | 12.01.1983 – 02.12.1987 | 15.03.2017 |
| 2. | அம்பத்தூர் மண்டலம் சென்னை மாநகராட்சி | 03.12.1987 – 26.10.1988 | 15.03.2017 |
| 3. | மதுராந்தகம் நகராட்சி | 27.10.1988 – 07.06.1993 | 15.03.2017 |
| 4. | ஆரணி நகராட்சி | 01.06.2001 – 21.08.2001 | 15.03.2017 |

முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட ஆவண நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முறையீட்டு மனுதாரர் மூத்த குடிமகளாகவும் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளராகவும் இருக்கும் நிலையில், அவரது முறையீட்டினை மனித நேயத்துடன் பரிசீலித்து, மேலும் காலம் தாழ்த்தாமல் அவரது கோரிக்கை குறித்த மனுமீது விதிகளின்படி உடன் நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதுசம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினை 30 நாட்களுக்குள் அனுப்பும் படியும் அறிவுறுத்தப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 15–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   ஆவடி நகராட்சி, ஆவடி.

2. மண்டல அலுவலர்,
   அம்பத்தூர் மண்டலம், அம்பத்தூர்.

3. நகராட்சி ஆணையர்,
   மதுராந்தகம் நகராட்சி, மதுராந்தகம்.

4. நகராட்சி ஆணையர்,
   ஆரணி நகராட்சி, ஆரணி.

5. திருமதி S. கலா,
   புது எண்.100, பாலகங்காதரர் தெரு,
   ஆதம்பாக்கம், சென்னை – 600 088.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்